# பாடம் 27: நான்கு இறுதி விடயங்கள்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு குறித்தும், அது நம்மை எவ்வாறு இயேசுவின் மீட்புப் பணியின் முக்கிய நிகழ்வுகள் வழியாக ஒவ்வொரு ஆண்டும் இட்டுச் செல்கிறது என்றும் நாம் கற்றோம். திருச்சபையின் பகுதியாக இருக்கின்ற நாம் எல்லாரும் நமது வாழ்வு முழுவதும் திருச்சபையுடனான நமது பயணத்தில் விண்ணகத்தின் முழுமையை முன்னோக்கி இருக்கிறோம். இந்த பாடத்தில், எல்லா மனிதர்களும் தங்களது வாழ்வின் முடிவில் சந்திக்க வேண்டிய நான்கு இறுதி விடயங்களைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. மண்ணகத்தில் மனித வாழ்வின் முடிவைக் குறிக்கின்ற நான்கு இறுதி விடயங்களைக் குறித்து புனித மரபு பேசுகிறது: இறப்பு, தீர்ப்பு, விண்ணகம், மற்றும் நரகம்.

2. மனிதர்கள் என்ற முறையில், நாம் பொருள்சார் மற்றும் ஆன்மாசார் உயிரினங்களாகப் படைக்கப்பட்டுள்ளோம். இதன் பொருள் நமது உருவாக்கத்தில் இரண்டு முக்கிய உட்கூறுகள் இருக்கின்றன: உடல் மற்றும் ஆன்மா. உங்கள் உடலின் காலம் முடிவுற்று, உங்கள் ஆன்மா (அல்லது ஆவி) உடலிலிருந்து வெளியேறுவதே இறப்பாகும். உங்கள் உடல் சிதைவுறத் தொடங்கும், ஆனால் உங்கள் ஆன்மா என்றென்றும் வாழும் (இறுதி உயிர்த்தெழுதலில் அது முடிவாக உங்கள் உடலோடு மீண்டும் ஒன்றிக்கும்).

3. திருமுழுக்கு பெற்றக் கிறிஸ்தவர்களாக, தொடக்கப் பாவத்திலிருந்து நாம் தூய்மையாக்கப் பெற்றிருந்தாலும் நாம் தொடர்ந்து உடல்சார் இறப்பை அனுபவிக்க வேண்டும். வீழ்ச்சியின் விளைவாக, மனித இயல்பு வலுவிழந்து காயமுற்றுள்ளது, அறியாமை உள்ளாகி, துன்பம், இறப்பின் ஆதிக்கம், பாவத்துக்கும் சாவுக்கும் ஆட்பட்டுள்ளது (கதிம 405, 418). இது "வேட்கை" என்று அழைக்கப்படுகிறது, இதன் காரணமாக நாம் திருமுழுக்கு பெற்றிருந்தாலும் தொடர்ந்து உடல்சார் இறப்பை அனுபவிக்க வேண்டியுள்ளது. இன்னுமதிகமாக, கடவுளின் இரக்கத்தை ஏற்க அல்லது மறுக்க ஒரு தனிநபருக்கு வழங்கப்பட்ட காலம் இறப்புடன் முடிவுக்கு வருகிறது.

*கதிம 1013-14*: "இறைத் திட்டத்தோடு தமது மண்ணக வாழ்வைச் செயலாக்கவும், தமது இறுதி இலக்கைத் தீர்மானிக்கவும் மனிதருக்கு கடவுள் வழங்கிய அருள் மற்றும் இரக்கத்தின் காலமாகிய, அவரது மண்ணகத் திருப்பயணத்தின் முடிவாக இறப்பு இருக்கிறது. நமது மண்ணக வாழ்வின் ஒற்றைக் கடவை முடிந்ததும், நாம் வேறு மண்ணக வாழ்வுக்குத் திரும்ப மாட்டோம்: 'மனிதருக்கு ஒருமுறை மட்டுமே இறப்பு விதிக்கப்பட்டுள்ளது.' இறப்புக்குப் பிறகு 'மறுபிறவி' எதுவும் இல்லை. நமது இறப்பின் நேரத்துக்கு நம்மைத் தயார்செய்ய திருச்சபை நம்மை ஊக்குவிக்கிறது..."

4. நமக்கு உடல்சார் இறப்புக்குப் பிறகு இரண்டு விதமான தீர்ப்புகளைக் கத்தோலிக்கம் வேறுபடுத்திக் காட்டுகிறது. முதலாவது *தனித் தீர்ப்பு* (கதிம 1022), இறந்ததும் தனிநபரது ஆன்மாவின் விதியைத் தீர்மானிக்கிறது. இரண்டாவது *பொதுத் தீர்ப்பு* (கதிம 1038), கிறிஸ்து மீண்டும் வரும்போது மனிதகுலம் முழுவதன் மீதும் நிகழும்.

எபிரேயர் 9:27: "மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர், அதன்பின் தீர்ப்பு வருகிறது."

*கதிம 1022*: "ஒவ்வொரு மனிதரும் தாம் இறக்கின்ற அதே கணத்தில், கிறிஸ்துவோடு தமது வாழ்வை ஒப்பிடும் தனித் தீர்ப்பில், தமது அழியாத ஆன்மாவில் தமது நித்தியக் கைம்மாறு

பெறுகின்றனர்: விண்ணகத்தில் பேறுநிறைநிலைக்கு -- தூய்மையுறல் வழியாக அல்லது உடனடியாக -- அல்லது உடனடியாக என்றுமுள்ள தண்டனையில் நுழைவதற்கு.''

5. பொதுத் தீர்ப்பு கிறிஸ்துவின் வருகையின்போது நிகழும், அதில் எல்லாரும் பொதுவிலும் ஒருங்கிணைந்த முறையிலும் தீர்ப்பிடப்படுவர். புனித மறைநூலின்படி, இது தனித் தீர்ப்பில் இருந்து தெளிவாக வேறுபட்டதும் தனிப்பட்டதும் ஆகும். தனிநபருக்கு இறுதியில் கணக்குத் தீர்க்கும் காலம் வருவது போன்றே, அது முழு உலகிற்கும் நிகழும். இந்த எதிர்கால நாள், பொதுத் தீர்ப்பு என்று திருச்சபை அழைக்கிறதன் வழியாக தற்போதைய ஊழிக்கு முடிவைக் கொணரும். அந்நாளில், நம்பிக்கை அறிக்கை கூறுவதைப் போல், கிறிஸ்து ''வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட மாட்சியுடன் திரும்பி வருவார்'' (காண் மத் 25:31-46; திவெ 20:11-13).

*கதிம 1038*: ''இறுதித் தீர்ப்புக்கு முன்பாக 'நேர்மையாளராகவும் நேர்மையற்றோராகவும்' (திப 24:15) இறந்த எல்லாரின் உயிர்த்தெழுதல் நிகழும். இது 'கல்லறைகளில் உள்ள எல்லாரும் அவரது (மானிட மகனின்) குரலைக் கேட்டு வெளியே வருகின்ற காலமாக இருக்கும். நல்லன செய்தோர் வாழ்வுபெற உயிர்த்தெழுவர். தீயன செய்தோர் தன்னைத் தீர்ப்பு பெற உயிர்த்தெழுவர்' (யோவா 5:28-29). பின்னர் கிறிஸ்து 'வானதூதர் புடைசூழ மாட்சியுடன் வருவார்... எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்றுகூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்து, செம்மறியாடுகளை வலப் பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அவர் அம்மக்களை வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார்... தீயவர்கள் நித்தியத் தண்டனை அடையவும், நேர்மையாளர்கள் நித்திய வாழ்வு பெறவும் செல்வார்கள்' (மத் 25:31,32,46).

*கதிம 1040*: ''முழு படைப்பு வேலையின் மற்றும் முழு மீட்பின் அருள்திட்டத்தின் பொருளை நாம் அறிவோம், மேலும் அனைத்தையும் அதன் இறுதி முடிவை நோக்கி நடத்திச் செல்லும் கடவுளது பராமரிப்பின் வியத்தகு வழிகளைப் புரிந்துகொள்வோம். கடவுளின் நீதி அவரது படைப்புயிர்களால் இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாவற்றின் மீது வெற்றி பெற்றதையும், மேலும் கடவுளின் அன்பு இறப்பை விட வலுவானது என்பதையும் இறுதித் தீர்ப்பு வெளிப்படுத்தும்.''

6. உடல்சார் இறப்பின்போது, இறந்தவரின் ஆன்மா, அதன் உடலின்றி, நரகத்திற்கு அல்லது விண்ணகத்திற்குத் தீர்ப்பிடப் பெறுகிறது. விண்ணக நிலைக்குள் நுழைவது நேரடியாகவோ அல்லது உத்தரிப்பு (தூய்மையுறல்) வழியாகவோ இருக்கலாம். இரண்டு விதத்திலும், தகுதி பெறுவதற்கு ஒருவர் எல்லா பாவத்திலிருந்தும் விடுதலை பெற்றிருக்க வேண்டும். கடவுளை முகமுகமாகப் பார்க்கின்றவர் ''பேறுநிறை காட்சியை'' பெற்றுள்ளதாகச் சொல்கிறோம், கன்னி மரியா மற்றும் நாம் வணங்குகின்ற அனைத்து புனிதர்களும் இந்த நிலையில் இருக்கின்றனர்.

*கதிம 1023-24*: ''கடவுளின் அருளிலும் நட்புறவிலும் இறக்கின்றவர்கள் நேர்த்தியாக தூய்மையுற்று கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்கின்றனர். அவர்கள் என்றென்றும் கடவுளைப் போன்று இருக்கிறார்கள், ஏனெனில் அவர் இருக்கிறது போலவே அவரை முகமுகமாகக் காண்கிறார்கள்... மிகத் தூய திரித்துவத்துடனான இந்த நேர்த்தியான வாழ்வே – திரித்துவம், கன்னி மரியா, வானதூதர்கள் மற்றும் எல்லா பேறுநிறைந்தோருடனான அன்பு மற்றும் வாழ்வின் இந்த ஒன்றிப்பே – விண்ணகம் என்று அழைக்கப்படுகிறது. விண்ணகம் என்பது இறுதி முடிவாக, மனிதரின் ஆழ்ந்த ஏக்கங்களின் நிறைவேறுதலாக, உச்ச நிலையாக, மற்றும் உறுதியான மகிழ்ச்சியாக இருக்கிறது.''

*கதிம 1030-31*: ''கடவுளின் அருளிலும் நட்புறவிலும் இறந்தவர்கள் எல்லாரும், இன்னும் நேர்த்தியாகத் தூய்மையுறாத நிலையிலும், உண்மையில் நித்திய மீட்புக்குத் தகுந்தவர்களே; ஆனால் இறப்புக்குப் பிறகு அவர்கள் தூய்மையாக்கப் பெறுகின்றனர், அதனால் விண்ணகக் களிப்பில் நுழைவதற்குத் தேவையான தூயநிலையை அடைகின்றனர். தேர்ந்தெடுக்கப் பெற்றோரின் இந்த இறுதி தூய்மையாக்கலுக்கு திருச்சபை *உத்தரிப்புநிலை* என்றப் பெயரை வழங்குகிறது, இது தீயோரின் தண்டனையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது...''

7. எப்பொழுதும் நல்ல வாழ்வை வாழ்வதும், கடவுளிடமும் நம்மைச் சுற்றியுள்ள மக்களிடமும் அன்பு செலுத்துவதும் முக்கியமானது. நாம் இளமையாக இருப்பதாக நினைத்தாலும், உண்மை யாதெனில், நமது வாழ்வு எப்போது முடியும் என்றும் நமக்கு ஒருபோதும் தெரியாது.

பல இளையோர் எதிர்பார்க்காத வயதில், எதிர்பார்க்காத சந்தர்ப்பங்களில் இறக்கின்றனர். உள்நோக்கத்துடன் கடவுளைப் புறக்கணிக்கின்ற மற்றும் ஒழுக்கமின்றி வாழ்கின்ற ஒரு நபர் மண்ணக வாழ்வு முடிந்தப் பிறகு மனந்திருந்தச் சாத்தியமில்லை.

*கதிம 393*: "...இறப்புக்குப் பிறகு மனிதருக்கு மனந்திருந்தல் இல்லை."

8. *கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வியில்* கடவுளின் அன்பை ஏற்றுக்கொண்டோர் மற்றும் அவரிடமிருந்து விலகிச் சென்றோருக்கு விதிக்கப்பட்ட நிலைகளாக விண்ணகமும் நரகமும் கூறப்படுகின்றன. இரு நிலைகளுமே நித்தியமானவையாக இருக்கின்றன – அதாவது, என்றுமுள்ள வாழ்வு அல்லது என்றுமுள்ளத் தண்டனை. விண்ணகம் என்பது பலரால் ஓர் "இடமாக" பார்க்கப்பட்டாலும், நாம் வழக்கமாகச் சிந்திக்கின்ற ஓரிடத்தைப் போன்ற விதத்தில் அதைப் புரிந்துகொள்ளக் கூடாது, ஏனெனில் அது காலத்துக்கும் வெளிக்கும் அப்பாற்பட்டது.

9. நமது நித்திய ஒன்றிப்பின் பயனாக, விண்ணகத்திற்குத் தயாரிப்பாக தூய்மையுறலில் இருக்கின்றத் தூய ஆன்மாக்களுக்கு வாழ்கின்றவர்களால் உதவ முடியும் என்று திருச்சபை நம்புகிறது. இதை இரண்டு விதங்களில் செய்யலாம்: அ) அவர்களுக்காகச் செபித்தல், மற்றும் ஆ) அவர்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்தல்.

10. "பேரானந்த" கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டக் குறிப்பிட்ட சீர்திருத்தக் குழுவினர் இருக்கின்றனர். கத்தோலிக்கத் திருச்சபை இதை போதித்ததோ, இந்த படிப்பினையில் நம்பிக்கை கொள்வதோ கிடையாது. "பேரானந்தம்" என்பது தூய மறைநூலின் விளக்கமாக கடந்த 130 ஆண்டுகளாக மட்டுமே இருக்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது சில நம்பிக்கையாளர்கள் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப் (பேரானந்தம்) பெறுவர் என்னும் கருத்தாக இது இருக்கிறது. இயேசு திரும்ப வரும்போது "மேகத்தில் மேலே எடுக்கப்படுவது" குறித்த 1 தெசலோனிக்கர் 4:16-17ன் பிறழ்விளக்கமே "பேரானந்தம்" என்றக் கருத்துரு ஆகும்.

இதன் அடிப்படையில் ஒரு சீர்திருத்தக் குழுவினர் பேசுகின்றனர், இயேசுவின் ஆயிரமாண்டு ஆட்சியின் தொடக்கத்தில் இந்தப் "பேரானந்தம்" நிகழும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர், மேலும் அவர்கள் அவரோடு ஆட்சி செய்வர், மேலும் மற்றவர்களுக்கு ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில் இந்த "பேரானந்தம்" நிகழும், தொடந்து உடனடியாக உலக முடிவும் பொதுத் தீர்ப்பும் நிகழும். சிலர் ஆயிரமாண்டு ஆட்சியின்போது இந்தப் "பேரானந்தம்" நிகழும் என்று கருதுகின்றனர். இது பல்வேறு சீர்திருத்தக் குழுக்களிடையே பெரும் பிரிவினையை ஏற்படுத்தி இருக்கிறது, ஆனால் இது கத்தோலிக்கரிடையே பெரிதாக ஆர்வம் தரவில்லை. கத்தோலிக்கர் என்ற முறையில், இயேசுவின் வருகையின் நேரத்தை ஆராய்வதை விடவும், நாம் தனிநபரின் இறப்பின்போது அவரது ஆன்மாவின் நிலை குறித்து கவனம் செலுத்துகிறோம். இயேசுவின் வருகையின் சரியான காலத்தைக் கணிக்க முடியாது என்று மறைநூல் பலமுறை நமக்கு எடுத்துரைக்கிறது (மத் 24:43; 2பேது 3:10; 1தெச 5:2,4; திவெ 16:15). இயேசு சரியாக எப்போது வருவார் என்று கணிப்பதை விட, நமது அன்றாட வாழ்வை வாழும் விதத்தில் நாம் கவனம் செலுத்துவது மிக முக்கியமானது.